பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 290

நிறுவனத்தின் பெயர் : நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

குழுவினால் இனம் காணப்பட்டுள்ள குறைபாடுகள்	குறைபாட்டினைத் திருத்துவதற்கு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை
முதலாவது பகுதி 1. உள்ளகக் கணக்காய்வு ஐயவினா ஆவணம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு இருக்காமை.	இந்த அலுவலகத்தில் மட்டுப்படுத்தப்பட்ட பணியாட் தொகுதி இருப்பதனால் உள்ளகக் கணக்காய்வு அலகினைப் பேணிச் செல்வதற்கு போதியளவு உத்தியோகத்தர்கள் இல்லை. ஆண்டொன்றிற்கு மிகவும் குறைந்த அளவிலான கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெறுவதுடன், உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை எனினும், தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைக் குறித்த வகையில் பேணிச்சென்று நிர்வாகம் மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2. வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காமை.	2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.
3. 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நிதி ஒழுங்குவிதி 756 (6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட திகதியில் உரிய அறிக்கையினைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்காமை.	2022 ஆம் ஆண்டுக்காக குறித்த வகையில் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த திகதியில் உரிய அறிக்கையை கணக்காய்வு தலைமை அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
4. அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்காமை.	நிறுவனத்திற்குச் சொந்தமான குழாம் வாகனங்கள் இல்லாததுடன், ஆணையாளரின் பாவனைக்கு மட்டும் ஒரு வாகனம் உள்ளது. தற்போது அதில் அரச இலச்சினை பொறிக்கப்படவில்லை.
5. 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய விசேட செலவுகள் பிரிவிற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்காமை.	2023 ஆம் ஆண்டுக்கு இந்த பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
6. உரிய திகதியில் வங்கிக் கணக்குக் கூற்றுக்களைத் தயாரித்து உறுதிப்படுத்தி கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பித்திருக்காமை.	தற்போது வங்கி இணக்கக் கூற்று குறித்த திகதியில் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன.
7. அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதி கணக்கு மீதி திறைசேரி புத்தகங்களுடன் காலாண்டு ரீதியில் ஒப்பிடப்படும் கட்டுப்பண இணக்கக் கூற்று குறித்த திகதிக்கு முன்னர் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டு தொடக்கம் கட்டுப்பண இணக்கக் கூற்றினைத் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
8. நிதி ஒழுங்குவிதி 134 (2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்து வருட ஆரம்பத்தில் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தினைத் தயாரித்திருக்காமை.	மேலே 1 இல் குறிப்பிடப்பட்ட வகையில் ஆகும்.

9. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு குறைந்தபட்சம் இரு கூட்டங்களையேனும் நடாத்தியிருக்காமை	மேலே 1 இல் குறிப்பிடப்பட்ட வகையில் ஆகும்.
இரண்டாம் பகுதி 1. நிறுவனத்தினால் பேணி வரப்படுகின்ற வெப்தளம் மூலமாக பொதுமக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுகளை குறிப்பு பதிவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்காமை.	அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றோம்.
2. நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவுகின்றமை.	2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிக் கூற்று தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கு அமைய, நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், முனைப்பழியுள்ள அபிப்பிராயமாக குறிப்பிடப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில், அந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் விடயங்களிலான தாக்கம் தவிர, உண்மையான மற்றும் நியாயமான நிலைமை பிரதிபலிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
3. ஒட்டுமொத்த பணியாட் தொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்காமை.	உடன்படிக்கையிடும் அளவிற்கான நீண்ட கால பயிற்சி நெறிகளுக்கு பங்குபற்ற எதிர்பார்க்கவில்லை என்பதனால் தற்போது செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு இருக்காதுடன் எதிர்காலத்தில் தேவைப்படுமிடத்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட முடியும்.
4. நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கு இணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனம் கண்டிருக்கவில்லை. இனம் காணப்பட்ட நிலைபெறுதகு நோக்கங்களுக்கான இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான செயலாற்றுகை இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. இனம் காணப்பட்ட நிலைபெறுதகு அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் கடமைப் பொறுப்புகளின் தன்மைகளுக்கு ஏற்ப நிலைபெறுதகு அபிவிருத்தி நோக்கங்களை இனம் காண்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றோம்.
5. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% ஐப் பார்க்கையிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது.	2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் காரணமாக உத்தியோகத்தர்களைப் பயிற்சி வேலைத் திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது.
6. 2020.08.28 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையில் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைப்பொறுப்புகள் தெளிவுறுத்தப்படும் வகையில் அதன் முன்னேற்றத்தினை அளவிடக்கூடிய 03 செயல்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் முன்னேற்றத்தினை அளவிடக்கூடிய செயலாற்றுகை சுட்டியை இனம் காண்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றோம்.

கே.பீ.கே. ஹிரிம்புரேகம
நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்
(ஒம்புட்ஸ்மன்)